1993 ஏப்ரல் 22]

திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்டப் பணியானது எவ்வளவு காலத்திற்குள் நிறைவேற்றப்படும்? அதற்கான திட்டத்தின் மதிப்பு எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அட்மினிஸ்டிரேடிவ் பிளாக் கட்டுவதற்கான திட்டத்திற்காகத்தான் ஒரு கோடியே 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆராய்ச்சி மையத்தை அமைப்பதற்காக அந்தத் திட்டம் தயாராகவில்லை. ஆனால் எதிர்காலத் திட்டத்திற்காக இடத்தை மட்டும் எடுத்து முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நில அளவைத்தான் ஏற்கெனவே நான் சொன்னேன். எனவே அதற்கானத் திட்டங்கள் எதிர்காலத்திலே தான் வகுக்கப்படும். அந்த நிலம் தேவை என்று நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். முறைப்படி, அந்த விதிமுறைகளின்படி அவர்கள் அதற்கான கால அவகாசம் எவ்வளவு தேவையோ அதைக் கொடுத்து நோட்டீசெல்லாம் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு நோட்டீசும் ஒவ்வொரு லேண்ட் ஓனருக்கும் கொடுத்து அதற்குப் பின்னாலே அதை அக்குயர் செய்ய வேண்டும். அந்த வகையிலே அவர்கள் நடவடிக்கை எடுத்து, கொடுத்த பின்பு தான் மேலும் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 427, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

427—

தரங்கம்பாடி அரசு மருத்துவமனையில் சித்தவைத்தியப் பிரிவு துவங்குதல்.

* 16889—திரு. எம். பூராசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி அரசு மருத்துவமனையில் சித்தவைத்தியப் பிரிவு துவங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

முற்பகல் 10:25

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பூம்புகார் பகுதியின் மைய இடம் தரங்கம்பாடி. அங்கே அரசு மருத்துவமனையில் சித்த வைத்தியத்தை ஏற்படுத்தினால் பொது மக்கள் லட்சக்கணக்கான பேர்கள் நல்லதொரு பலனை அடைவார்கள், சித்த வைத்தியத்திற்கு அரசு ஊக்கமும், ஆக்கமும், அளிக்கின்றது. ஆகவே தயவு செய்து அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலேயும் சித்த மருத்துவத் துறை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது அரசினுடைய கொள்கையாக வைத்து படிப்படியாக செய்து வருகிறது. எனவே, ஒரே ஆண்டிலே எல்லா இடங்களிலும் செய்துவிட முடியாது என்ற நிலையிலே தான் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட சில இடங்களை மட்டும் நாம் எடுத்து செய்து வருகிறோம். எனவே எதிர் வருகின்ற ஆண்டிலே இதைப் பார்த்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளலாம்,

திரு. எம். பூராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எனது பகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி. ஏழை எளியவர்கள், ஹரிஜனங்கள், மீனவர்கள் வாழ்கின்ற பகுதி. ஆகவே தயவு செய்து வருகின்ற ஆணடிலாவது அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே. வருகிற ஆண்டிலே அதிகமான அளவிலே அதற்கான இடங்கள் ஒதுக்கப்படுகின்றபோது கண்டிப்பாக பூராசாமி அவர்களுடைய தொகுதியும் கவனிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண், 42 டாக்டர் வெ, சரோஜா. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,